வாரம் - 23 பேசிப் பழகுவோம் எண் - 21

# சொற்கள் , தொடர்கள் அறிமுகம்

## புதிய சூழலும் அதற்குரிய **சொற்களும்**

ஒவ்வொரு வாரமும் ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் புதிய ஒரு சூழலை அறிமுகப்படுத்த வேண்டும்.

மாணவர்கள் எதிர்கொள்கிற சூழல்களை வரிசைப்படுத்தி அவற்றுள் அதிக பயன்பாட்டுடைய சூழலைத் தேர்ந்தெடுக்கவும்

அந்தச் சூழலில் காணப்படுகிற பொருள்கள் , செயல்களின் பெயர்களைப் பட்டியலிடவும்.
சூழலில் பயன்படுகிற பேச்சுகளை வரிசைப்படுத்தி அவற்றை வினாவழியில் விளங்கிக் கொள்வதாக உரையாடல் வழியில் புரிந்து கொள்வதாக முறைபடுத்தவும். எளிய உரையாடல்களை வடிவமைக்கவும்.

இந்த உரையாடல்களை , பேசுவதற்கான தொடர்களை வகுப்பறையில் உரையாடலாக நிகழ்த்திக் காட்டி தமிழில் எவ்வாறு உரையாடுவது என்பதை மாணவர்கள் உள்வாங்கச் செய்யவும்.

உரையாடல்கள் அயற்சொற்களற்ற தெளிதமிழாகவும் எளிய சொற்களாகவும் , அதிகப் பயன்பாடு உடையதாகவும் வினா விடையில் அமைந்ததாகவும் உருவாக்கவும் .

# எழுத்து அறிவோம்

## எ வரிசை எழுத்துகள் அறிமுகம்

க் ச் ட் த் ப் ற் - ய் ர் ல் வ் ழ் ள் - ங் ஞ் ண் ந் ம் ன்.

க ச ட த ப ற - ய ர ல வ ழ ள - ங ஞ ண ந ம ன

கீ சீ டீ தீ பீ றீ
யீ ரீ லீ வீ ழீ ளீ
ஙீ ஞீ ணீ நீ மீ னீ

| | | |
|---|---|---|
| க் + இ = கி | ச் + இ = சி | ட் + இ = டி |
| க் + ஈ = கீ | ச் + ஈ = சீ | ட் + ஈ = டீ |
| க் + எ = கெ | ச் + எ = செ | ட் + எ = டெ |

எ வரிசைக்குக் குறியீடாக அமைவது ஒற்றைக் கொம்பு

குறியீடாக உள்ள ஒற்றைக் கொம்பினை எழுத்தின் வலது பக்கம் எழுத

**எ வரிசை எழுத்தாகிறது**

# மெய் + உயிர் = உயிர்மெய்

| | | |
|---|---|---|
| க் + எ = | ய் + எ = | ங் + எ = |
| ச் + எ = | ர் + எ = | ஞ் + எ = |
| ட் + எ = | ல் + எ = | ண் + எ = |
| த் + எ = | வ் + எ = | ந் + எ = |
| ப் + எ = | ழ் + எ = | ம் + எ = |
| ற் + எ = | ள் + எ = | ன் + எ = |

மெய்யெழுத்தும் உயிரெழுத்தும் இணைந்து உருவாகும் எ வரிசை உயிர்மெய் எழுத்துகளை அருகிலுள்ள கட்டத்திற்குள் மாணவர்கள் எழுத ஊக்குவிக்கவும் உயிர்மெய் எழுத்து எப்படி உருவாகிறது என்பதை உணரச் செய்யவும்

# எ - வரிசை எழுத்துகள்




ஒற்றைக் கொம்பு குறியீட்டை எழுத்துகளின் வலது பக்கம் எழுதும் பொழுது எழுத்து "எ" ஒலிப்புடன் ஒலிக்கிறது என்பதை விளக்கி ஒற்றைக் கொம்பு குறியீட்டை எழுத்தின் வலது பக்கம் எழுதி ஒலிக்கவும் குறியீடு இல்லாமல் ஒலிக்கவும் பயிற்சி தரவும்

**செய்தித்தாளில் எ வரிசை எழுத்துகளை வட்டமிடச் செய்யவும்**

# எ - வரிசை எழுத்துகள்

23

கெட, கெட்ட, கெஞ்ச, செடி,
செயல், செந்நாய், செய்தி,
செம்படவர், செவ்வானம்,
செரித்தல், செவ்வாய், தெப்பம்,
தெரிந்த, பெண், பெரிய, பெயர்,
பெருங்காயம், வெற்றி,
வெங்காயம், வெட்ட, வெயில்,
வெள்ளி, வெள்ளம், வெல்லம்,
வெப்பம், எண்ணெய், ஞெகிழி,
நெய், நெல், நெஞ்சம், நெற்றி,
நெல்லி, மெய்க்காப்பாளன்,
மெட்டி, மெல்ல, மெய்,

மேலுள்ள சொற்களை மாணவர்கள் தாங்களாகவே எழுத்துக்கூட்டி படிக்க ஊக்குவிக்கவும். ஆசிரியர் சொல்லித்தரக் கூடாது அவர்களாகவே முயற்சி செய்ய ஊக்குவிக்கவும் ஒலிக்கத் தடுமாறும் பொழுது உதவலாம்

செய்தித்தாளில் எ வரிசை எழுத்துகளை வட்டமிட்டு அதனைக் கரும்பலகையில் எழுதி ஒலிக்கப் பயிற்சி தரவும் .

# வாரம் - 23

## மாணவர் செயற்பாடு

மாணவர் பெயர் ....................................... நிலை........... நாள்...............

**எ வரிசையின் 18 எழுத்துகளையும் கீழே எழுதவும்.**

**எ வரிசையின் 18 எழுத்துகளையும் செய்தித்தாளில் வட்டமிடவும்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

# வாரம் - 23

## வீட்டு வேலை

மாணவர் பெயர் ...................................... நிலை........... நாள்...............

எ வரிசையின் 18 எழுத்துகளையும் கீழே எழுதவும்.

எ வரிசையின் 18 எழுத்துகளையும் செய்தித்தாளில் வட்டமிடவும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |